அளவிற்கு அந்த டிபாசிட் போட்டார்களோ, எந்தக் கன்டிஷனில் அந்த டிபாசிட் செய்தார்களோ அது நிறைவு பெற்றவுடன் அந்தத் தொகை திருப்பித் தரப்படும்.

கிராம கூட்டுறவு வங்கி ஊழியர்களின் சம்பளம்

*வினா எண். 440—திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள கிராமக் கூட்டுறவு வங்கிகளில் வருமானம் குறைந்துவிட்டது என்ற காரணத்தால் ஊழியர்களுக்கு மாதச் சம்பளங்கள் ஏராளமான வங்கிகள் கொடுக்காமலிருந்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மாவட்ட வாரியாக எவ்வளவு கிராம வங்கிகளில் சம்பளம் கொடுக்கப்படாமலிருக்கிறது ?

(இ) இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) கடன் வசூலிக்காமல் இருப்பதால் சம்பளம் கொடுக்க பணம் இல்லாத நிலை கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்டுள்ளது.

(ஆ) மாவட்ட வாரியாகச் சம்பளம் வழங்கப்படாமல் இருக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் :—

செங்கற்பட்டு	48
வட ஆற்காடு	136
தென் ஆற்காடு	68
தஞ்சாவூர்	136
திருச்சி	7
இராமநாதபுரம்	101
மதுரை	48
திருநெல்வேலி	134
கோவை மற்றும் பெரியார்	126
சேலம்	13
தர்மபுரி	110
ஆக மொத்தம்	927

இருக்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 23]

(இ) கடன் வசூலில் தீவிரம் காட்டி நிதிநிலையை உயர்த்தி தங்களுக்குச் சேரவேண்டிய சம்பள நிலுவையைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அச் சங்கங்கள் அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றன.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறக் கூட்டுறவு சங்கங்களில் 927 சங்கங்கள் அங்கே பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு சம்பளம் சரிவர அளிக்காமல் இருக்கிறது என்கிற தகவலை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஒரு 'டிஸ்கிரிமினேஷன்' என்கிற முறையில் இது இருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் என்பது அரைகுறை அரசாங்க ஸ்தாபனமாகக் கருதப்படுகிறது. வேலை செய்கிற ஊழியர்களுக்கு வேலை செய்தால் சம்பளம் கொடுக்கவேண்டும் என்பது சட்டமாக இருந்தாலும், இப்படி சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கும் அநீதியை அரசு அறிந்து அந்த நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா? அவர்கள் கடன் வசூலிக்காத காரணத்தால் சம்பளம் கொடுக்கப் பணம் இல்லை என்று சொன்னால், சம்பளம் கொடுப்பதற்கான பணத்தை அரசாங்கமே முன்பணமாகக் கொடுத்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இந்தச் சங்கங்களில் உள்ள பணியாளர்கள் எல்லாம் சம்பளம் பெறாமல் பணி செய்கிறார்கள் என்கிற தகவல் அரசுக்குத் தெரிய வந்தவுடனேயே அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. இங்கேயுள்ள பிரச்னை என்ன வென்றால், அந்தச் சங்கங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் 'டர்ம் ஆப் ஆபீஸ்' முடிந்து விட்டது. அவர்கள் 'பாரோட் லைப்பில்' அந்த நிர்வாகத்தை மேற்கொண்டு பொறுப்பில் இருந்து வருகிறார்கள். 'தே ஆர் ஆல் அடானமஸ் பாடீஸ்' அந்தச் சங்கங்களுக்கும் அரசுக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கிறது. இருந்தபோதிலும் அங்கேயுள்ள பணியாளர்கள் சம்பளம் இல்லாமல் இருக்கும் நிலை வருந்தத்தக்கது என்பதை உணர்ந்துதான் அந்தச் சங்கங்கள் 'வயபிள்ளாக' செயல்படவேண்டும் என்கிற அடிப்படையில் மைய வங்கிகள் மூலம் சில உதவிகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. கடன் வசூலைத் தீவிரப் படுத்தியிருக்கிறோம். இந்த அடிப்படையில் அவர்களின் இந்த நிலை விரைவில் சீரடையும் என்று அரசு நம்புகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சங்கங்களில் உள்ள நிலைமைகளை மாற்றுவதற்கு பல்வேறு ரூபங்களில் பலவிதமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். நான் நேரடியாக ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். ஒரு தனி

யார் துறையில் உள்ள தொழிற்சாலையில் நஷ்டம் வந்தால் கூட அங்கே பணிசெய்கின்ற பணியாளர்களுக்குச் சம்பளம் மற்றும் போனஸ் கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறபோது, ஏறக்குறைய அரசு ஸ்தாபனங்கள் என்கிற வகையில் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் இயங்குகின்ற இந்த சங்கங்களில் உள்ள பணியாளர்களின் நிலைமையைப் போக்கவும் அரசுக்குச் சம்பந்தம் இருக்கிறது. அதிலே இருக்கும் பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் சம்பளம் இல்லாமல் பட்டினியால் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிற காரணத்தால், அரசே தன்னுடைய கையில் இருந்து பணத்தை முன்பணமாகக் கொடுத்து, அந்தச் சங்கங்கள் வயபிள்ளாக மாறுகின்ற போது திருப்பிச் செலுத்தவேண்டும் என்ற அடிப்படையில் அந்தப் பணத்தை முன்பணமாகக் கொடுத்து, அந்தப் பணியாளர்களின் கஷ்ட நிலையைப் போக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே இதற்கு நேரடியாக முன் பணம் தரமுடியாது. ஆனாலும் அந்தச் சங்கங்களுக்கு முன் பணம் தருவதற்கு அந்தத் தகுதியைப் பெற்று இருக்கின்ற மாவட்ட மைய வங்கிகள் மூலம் இது குறித்து எத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம் என்பதை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் கிராமங்களில் பயிர்க்கடனாகவும் அல்லது விவசாயக் கடனாகவும்தான் அதிகம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கடன்கள், அரசுத் தரப்பில் இருந்து ஒதுக்கப்பட்ட நிதி போக மற்றவை வறட்சி காரணமாக பல மாவட்டங்களில் இருக்கின்ற நிலைமை காரணமாக வசூலிக்கப்படாமல் இருக்கின்றன. அதுவும் சம்பளம் கொடுக்காமல் இருப்பதற்கு ஒரு காரணம் என்று நினைக்கிறேன். ஆகவே, அதையும் பரிசீலித்து அந்தப் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, வறட்சி என்பது தற்போது அண்மையிலே ஏற்பட்ட ஒன்று. ஆனால் வாங்கிய கடனை வசதி படைத்த விவசாயிகள் கூட கிட்டத்தட்ட 3,4 ஆண்டுகளாக கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே, அதை இதோடு ஒப்பிட முடியாது. என்றாலும் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1981 மார்ச் 23]

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் 1977-க்குப் பிறகு வேலையில் சேர்ந்தவர்களை இப்போது வேலை நீக்கம் செய்து வருகிறார்கள். அதை அரசு கவனித்து, வேலை நீக்கம் செய்யாமல் இருக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, தற்காலிகமாக ஆனால் விதிகளுக்குப் புறம்பாக யாரேனும் அமர்த்தப்பட்டிருந்தால் அவர்களை எல்லாம் மாற்றிவிட்டு, முறைப்படி எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலம் பணியிலே நியமிக்க வேண்டுமென்பதால் அவ்வாறு நீக்கம் செய்யலாம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரமான தகவல் என்னவென்று தந்தால் அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, மாவட்ட மைய வங்கிகளிலே கூட கடன் வாங்கிய வசதி படைத்த விவசாயிகள் பணத்தைத் திரும்ப செலுத்தவில்லை. ஆகவே, மாவட்ட மைய வங்கிகளிலே கூட பணம் இல்லாத சூழ்நிலை இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருக்கும்போது கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு, மைய வங்கியோடு தொடர்புகொண்டு இது வரை கொடுக்கப்படாத சம்பளத்திற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்யும் முயற்சியில் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்படி சாத்தியமாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மத்திய வங்கிகளுக்கு முன்பணமாக சுமார் 21 கோடி ரூபாய் அரசு தந்ததன்பேரில் மத்திய வங்கிகள் பல 'வயபிள்' வங்கிகளாகி இருக்கின்றன. அது மட்டுமல்ல. மத்திய வங்கிகளுக்கு விவசாயிகள் நேரடியாக பணம் செலுத்த வேண்டியதில்லை. மத்திய வங்கிகள் பிரைமரி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் விவசாயிகளுக்குக் கடன் தருகின்றன. கிட்டத்தட்ட 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் கூட, அந்த நிலத்திலிருந்து மட்டுமல்ல, வேறு தொழில்கள் போன்றவற்றில் ஈடுபட்டு வருமானம் பெறுகின்ற நிலையில் இருக்கிற வசதி படைத்த பெரும் விவசாயிகள்கூட கடனைக் கட்டாமல் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் எல்லாம் கடனைக் கட்டினால் நிச்சயமாக ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாத நிலை இருக்காது. ஆகையால் தான் இந்த அரசு வசதி படைத்த விவசாயிகள் கூட்டுறவுக் கடனைத் திருப்பித் தரவேண்டுமென்று வலியுறுத்தி வருகிறது.